**இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத் - 2013**

-----------------------------------------------------------------------

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அத்தியாயம்) 39 (அ) (3) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

## 2.1 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பௌதீகரீதியாகக் காணப்படாத ரூபா 985,925 தொகையான 07 சொத்து விடயங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 84,350 பெறுமதியான தளபாடம், அலுவலக உபகரணங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் நலன்புரிச் சங்க உபகரணங்கள் போன்ற விடயங்களுக்காக வருடாந்த பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 805,000 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்படாமல் பொதுத் திறைசேரியின் சேகரித்தல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வுக் கட்டணத்திற்காக வழங்கப்பட்ட முற்கொடுப்பனவுகளைக் கருத்திற் கொள்ளாது நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையினால் ரூபா 120,000 தொகையான மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

---------------------------------------------------------------------

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எந்தச் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | **விடயம்** | **பெறுமதி** |
|---|---|---|
| | --------------- | ---------------- |
| | | ரூபா |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,272 |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 |

**3. நிதி மீளாய்வு**

--------------------------

**3.1 நிதி விளைவுகள்**

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 497,051 மிகையைக் காண்பித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் அது ரூபா 463,652 மிகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 33,399 தொகையான அதிகரிப்பைக் காட்டியது.

**3.2 செயலாற்றல்**

---------------------------------

**3.2.1 நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்கால நிலைமை**

-----------------------------------------------------------------------------------------------

செயற்படுகின்ற நிலையில் இல்லாத இந்த நிதியத்தினைக் கலைக்கும் வகையில் உரிய அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கில் காட்டப்பட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைத்து அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் நிதியத்தைக் கலைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறவேண்டியிருந்தமை அரசாங்க நிதித் திணைக்களத்தினால் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய பீஎப்/எப்டீ/04/46 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 யூன் 23 ஆந் திகதி வரையும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்